**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.181/2025**

2025ம் ஆண்டு **அக்டோபர் மாதம் 31–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | வா.சா | 1 |
| த/க/பெயர் | காளியப்பன் | தொழில் | கல்குவாரி |
| கிராமம் | திருச்செங்கோடு | வட்டம் | திருச்செங்கோடு |
| வயது | 50 | நாள் | 31.10.2025 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 24.03.2023 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 1, 2 பிரதிவாதிகள் திருச்செங்கோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.212/2024–ன் பிராது சார்வு நகல் **வா.த.சா.ஆ. 2 ஆகவும்,**

3) 29.04.2025 தேதியிட்ட தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பு கணினி நகல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) பட்டா எண்.1428-க்கான கணினி பட்டா **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran,

Principal Subordinate Judge, Tiruchengode.